2016 பிப்ரவரி 17]

51—

கோயிலைப் புனரமைத்தல்

***35179 திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருப்புங்கூர் அருள்மிகு சிவலோகநாதசுவாமி திருக்கோயிலைப் புனரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், சீர்காழி வட்டம், திருப்புங்கூர் அருள்மிகு சிவலோகநாதசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு விழா 17–6–2005–ல் நடத்தப்பட்டுள்ளது. தற்போது இத்திருக்கோயில் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தினமும் நான்கு கால பூஜை நடைபெற்று வருகிறது. ஆகம விதிகளின்படி, 12 வருடங்கள் நிறைவடையும்போது திருக்கோயில்களுக்குத் திருப்பணியும், குடமுழுக்கும் நடைபெறுவது வழக்கம். அதன்படி இத்திருக்கோயிலுக்கு 12 ஆண்டுகள் நிறைவடையும்போது, முழுமையான திருப்பணிகள் செய்யப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் நலன் காக்க தன்னையே அர்ப்பணித்திடும் தியாகத் திருவுருவமே, தமிழகத்தின் தவப்பயனே, அகிலம் போற்றும் அம்பிகையே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) உயிரும்

[2016 பிப்ரவரி 17

உள்ளமும், மலரும் மணமும், நரம்பும் நாதமும், கனியும் ருசியும், மணியும் ஒலியுமாய் நாடு போற்றும் நாராயணியே, அம்மா! வாய்மையே வெல்லும் என்று வரலாற்றுச் சான்றாகி, நீதியே நிலைக்கும் என்று நிகழ்கால சாட்சியாகி, தர்மம் காக்கின்ற தாயுரு தெய்வமே, அம்மா! வான்மழையாய் வந்திறங்கி, தேன்தமிழ்த் தேசத்தை குளிர்விக்கும் தேவி அகிலாண்டேஸ்வரியே அம்மா! ஆலயம்தோறும் அன்னதானத் திட்டத்தை வழங்கிய அன்னபூரணி என்று பக்தர்களின் உள்ளங்களை மலரச் செய்த உலக நாயகியே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) பழமையான கோயில்களைச் சீரமைத்த செங்கமலவல்லி தாயே எங்கள் அம்மா! தமிழர்களுக்குத் தாயாகி, தந்தையுமாகிய எங்கள் தமிழர்குல சாமியே, மாசி மகம் தந்த மகிமையே எங்கள் அம்மா! உங்கள் தெய்வீகத் திருவடிகளை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புங்கூர் அருள்மிகு சிவலோகநாதசுவாமி ஆலயம் மிகவும் சிறப்பு வாய்ந்த ஆலயமாகும். நந்தனுக்கு நந்தி வழிவிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலம். இராஜேந்திர சோழ மன்னன் மழை வேண்டி இத்திருத்தலத்தில் சுந்தரரைப் பாடவைத்து, மழை பொழிய வைத்த திருத்தலம். மழை அதிகமாகி வெள்ளப் பெருக்கெடுத்ததால், அதை நிறுத்த வேண்டி சுந்தரர் பாடிய பாடலுக்கு சோழ மன்னன் பன்னிருவேலி நிலம் கொடுத்த வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலமாகும். பிரளய காலத்தில் வெள்ளம் வந்தபோது, விநாயகரே ஒரே இரவில் குளம் வெட்டிக் கொடுத்து, வெள்ளத்திலிருந்து மக்களைக் காப்பாற்றிய வரலாற்றுச் சிறப்பும் இத்திருத்தலத்திற்கு உண்டு. இவ்வாலயத்தில் வெள்ளந்தாங்கி, சூரிய புஷ்கரணி, சந்திர புஷ்கரணி என்ற மூன்று புண்ணிய திருக்குளங்கள் உள்ளன. இந்த ஆலயத்திற்கு ஆகம விதிப்படி வரவிருக்கிற காலங்களில் திருப்பணி செய்து, குடமுழுக்கு நடத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த ஆலயப் பணிகளைச் சிறப்படையச் செய்து, குடமுழுக்கு நடத்துகின்றபோதும், தமிழகத்தினுடைய முதலமைச்சராக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே ஆட்சி புரிவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நம்பிக்கையோடு, திருப்புங்கூர் அருள்மிகு சிவலோகநாதசுவாமி ஆலயத்திற்கு சுற்றுச் சுவர் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு முழுவதும், 8,620 திருக்கோயில்களுக்கு முழுமையான திருப்பணிகளைச் செய்து, குடமுழுக்கு கண்ட தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் 379 கோடியே 62 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, அவை செலவிடப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், 2,268 சிறு கிராமப்புற திருக்கோயில்களுக்கு ரூபாய் 11 கோடியே 34 இலட்சமும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளிலுள்ள 2,636 சிறு திருக்கோயில்களுக்கு ரூபாய் 13.18 கோடியும் வழங்கப்பட்டு திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், 1,004 கிராமப்புற சிறு திருக்கோயில்களுக்கும் ரூபாய் 5 கோடியே 2 இலட்சமும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியிலுள்ள 1,004 சிறு திருக்கோயில்களுக்கு ரூபாய் 5 கோடியே 2 இலட்சமும் வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதற்கான பணிகளும் துவங்கப்பட்டுள்ளன என்பதனையும் இந்த நேரத்திலே அவையிலே தெரிவிப்பதை பெருமையாகக் கருதுகிறேன்.*

முற்பகல் 10—35

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு சீர்காழி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, திருப்புங்கூர் சிவலோகநாதசுவாமி திருக்கோயில் வரலாறுகளைப்பற்றியெல்லாம் சிறப்பாகச் சொன்னார்கள். அது 100 ஆண்டுகளுக்கும் மேலாக பழமைபெற்ற திருக்கோயில். அந்தத் திருக்கோயிலிலே பணியைத் துவங்க வேண்டுமென்று சொன்னால், தொல்லியல் துறையிலே அனுமதி பெற்று, அவர்களின் கருத்துருவைப் பெற்றபின்னாலேதான் அங்கே பணிகளைத் தொடங்கவேண்டும், தொடங்க முடியும். அதனடிப்படையில், அங்கே மதில் சுவர்கள் சிதிலமடைந்து இருக்குமேயானால், அதற்கு தொல்லியல் துறையினுடைய கருத்துருவைப் பெற்று உடனடியாக புனரமைப்புப் பணிகளைத் தொடங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதனை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் மட்டும் இதுவரை 561 திருக்கோயில்களுக்கு திருப்பணியைக் கண்டிருக்கிறார்கள்; குடமுழுக்கைக் கண்டிருக்கிறார்கள். அதில், சீர்காழி தொகுதியிலே மட்டும் 71 திருக்கோயில்களில் மொத்தம் 32 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் செய்யப்பட்டு, குடமுழுக்கும் நடத்தப்பட்டுள்ளது. இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள திருப்புங்கூர் சிவலோகநாதசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு கடந்த 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் நடைபெற்றுள்ளது. 2017—ல்தான் 12 ஆண்டுகள் நிறைவடையப் போகிறது. 2017—ல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திருக்கோயிலினுடைய திருப்பணியை முழுமையாகச் செய்து குடமுழுக்கை நடத்துவார்கள் என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச் சுவர் அமைத்துக் கொடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, மகாராஜபுரம் ஊராட்சி, கன்னிக்கினியனார்கோயில் கிராமம், நேத்ரபாலேஸ்வரர் திருக்கோயில், ஆனைக்காரன்சத்திரம் ஊராட்சி, வேணுகோபாலஸ்வாமி திருக்கோயில் மிகவும் பழமைவாய்ந்த கோயில்களாக உள்ளதால், இந்த இரண்டு கோயில்களுக்கும் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய தன்னிகரில்லா முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 4¾ ஆண்டுகளில் பழமைமாறாமல் தொன்மை வாய்ந்த 250 திருக்கோயில்களுக்கு ஓராண்டுக்கு 22.50 கோடி ரூபாய் வீதம் நிதி ஒதுக்கி, இதுவரை 90 கோடி ரூபாய் செலவிடப்பட்டு, அத்திருக்கோயில்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இரண்டு திருக்கோயில்களும் மிகவும் பழமையானவை. மகாராஜபுரம், கொள்ளிடம் பகுதியைச் சேர்ந்த நேத்ரபாலேஸ்வரர் திருக்கோயில், ஆனைக்காரன்சத்திரம் வேணுகோபாலஸ்வாமி திருக்கோயில் ஆகிய இந்த இரண்டு திருக்கோயில்கள் குறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச்சென்று, உடனடியாக பணிகள் தொடங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

வாகன எரிபொருள்

***55654—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் எத்தனாலை எரிபொருளாகப் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் எத்தனாலை எரிபொருளாகப் பயன்படுத்தி இயக்கும் திட்டம் அரசின்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS